தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 5-8-2015
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் மண் நலம் பற்றிய விரிவுரை நடைபெற்றது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தேசிய மாணவர் படையின் பயிற்சி முகாம் நான்காவது பட்டாலியன் சார்பில் ஆகஸ்டு 1 முதல் 10 வரை நடைபெற்று வருகிறது. இந்த முகாமில் பல்வேறு பள்ளி மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் 550 பேர் கலந்து கொண்டுள்ளனர்.

இம்முகாமில் ஒரு பகுதியாக பல்வேறு தலைப்புகளில் விரிவுரைகள் நடைபெற்று வருகின்றன. 2015ம் ஆண்டு பன்னாட்டு மண் வருடமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு இன்று “மண் நலம்” என்ற தலைப்பில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழத்தின் மண்ணியல் துறை பேராசியரியர் வடிவேல் சிறப்புரை ஆற்றினார். அவர் தமது உரையில் மண்ணின் அடிப்படை பண்புகளையும் மண் உருவாதல், மண் பாதுகாப்பு மற்றும் மண்வளம் பேணிக்காத்தல் குறித்து எடுத்துரைத்தார். குறிப்பாக, பள்ளி மாணவர்களுக்கு உதவிப் பேராசிரியர்களால் மேற்கொள்ளப்பட்ட செயல் விளக்கங்கள் சிறப்பாக இருந்தன.

இவ்விழாவிற்கு கோவை 4வது பட்டாலியன் தலைமை அதிகாரி கர்னல் ஆண்டனி ஜோசப் தலைமை தாங்கினார். இதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கைலக்கழக தேசிய மாணவர் படை அலுவலர் லெப்டினன்ட் கு.ம.செல்லமுத்து செய்திருந்தார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்